# பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா

சிறுவருக்கு உரிய



JPL
C1291

மைக் கதைகள்

சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

எஸ். டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா

KOHA JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

83493

12910.0.

1291

பாவலவன்
பண்டிதர். பா. சத்தியசீலன் (B. A. Hons.)
யாத்து அமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83493 C.C

# என் உரை

நீண்ட கதைகள் இரண்டும்,
பாட்டுக் கூத்து ஒன்றும்,
இறுதியிலே குறும்பாக்கள் சிலவும்,
இச்சிறுவர் சின்னூலில் அடங்கியுள்ளன,
இக்கதைகளின் கருமூலங்கள்
மேலை மொழிகளில் வழங்குவதால்,
தமிழ் தழீஇ வரும் இவற்றைச்
'சீமைக் கதைகள்' என்ற
சிறப்புப் பெயரால் சூட்டினேம்.

இச்சிறுவர் சின்னூலை நன்னூலாக்கிடும் தகமைக்கான
அணிந்துரை ஒன்றை
அளித்திட்ட
பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களுக்கும்,
அழகுற இந்நூலை அச்சியற்றித்தந்த
சுவர்ணா அச்சக உரிமையாளர்
தம்பி ஜெகன் அவர்களுக்கும்,
சரவை திருத்தியதோடு, சந்தமுற இந்த நூல்
அமைந்திடும் வகையில் ஆங்காங்கு எனது
சகாயரும் ஆகிய கலைஞர் நவாலியூர் நடேசன்
அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

'தாய்மனை'
அல்லைப்பிட்டி,
21-10-89

— ஆக்கியோன்

சேர்வு எண்
பணை
8/11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர்களுக்கான கதைப் பாடல்கள் புனைவதிலே ஈழத்திற் சில கவிஞர்களே கைதேர்ந்தவர்களாயுள்ளனர். இவர்களுட் பாவலவன் பா. சத்தியசீலனும் ஒருவர். இவரு டைய பல சிறுவர்க்கான கதைப் பாடல்கள் சிறந்த வண்ண ஓவியங்களுடன் வெளிவந்துள்ளன. இந்த வரிசையிலே 'பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா' என்னும் இந் நூல் இப்பொழுது வெளிவருகின்றது. ஏற்கனவே வெளி வந்த இவருடைய கதைப் பாடல்கள் சிறுவர்களை நன்கு கவர்ந்துள்ளன. இந்நூலும் அவர்களை நிச்சயமாகக் கவரும் என்பதில் ஐயமில்லை.

இதில், **'அந்த அதிசயமான பாத அணிகள்'** என் னும் கதைப் பாடல், இங்கிலீசுப் பாட்டி கதை சொல்வதாக அமைந்துள்ளது. ஆங்கிலச் சிறுவர் கதை ஒன்றினைத் தழு வியே ஆசிரியர் இப்பாடலைப் புனைந்துள்ளார். ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியுள்ள தன் பாடலிலே ஆங்கிலப் பாவடிவத் தன்மையினையும் ஆசிரியர் இடையிடையே பெய்துள்ளார். ஆங்கிலப் பாக்களிலே இறுதியிலேதான் எதுகைகள் அமைவதுண்டு. இங்கும்,

"தோலைச் சேர்த்து வெட்டி
நூலைக் கோத்துக் கட்டி"

என்றும்,

"முத்தன் என்ற செம்மான்
மெத்த ஏழை அம்மான்"

என்றும் அமையும் பாடலடிகளிலே 'வெட்டி' 'கட்டி', செம்மான்', 'அம்மான்' என்று இறுதியிலே எதுகைகள் அமைகின்றன. கதைப்பாடலின் தொடக்கத்தைப் படிப்பவர் களுக்கு நவாலியூர் சோமசுந்தரப் புலவருடைய "பருத்தித் துறை ஊராம் பவளக்கொடி பேராம்" என்றுதொடங்கும் கதைப்பாடல் உடனடியாக நினைவுக்கு வரும். எனினும் கவிஞர் சத்தியசீலன் இக் கதைப் பாடலுக்குக் கையாளும் பாவடிவம் சற்று வேறுபட்டதாகும். 'பன்றியாரை வென்று விட்ட பாட்டி அம்மா' சிறுவர்களுடைய சிந்தனைஓட்டத் துக்கு ஏற்றதான செய்யுள் நடையில் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் தொடர்பான தாலாட்டுப் போன்ற நாட்டார் பாடல்களிலே அடிகள் மறித்து வருவதுபோல் இங்கும் பல சொற்கள், சொற்றொடர்கள், அடிகள் மறித்து வருகின்றன. சிறுவர்களுடைய மனத்திலே தங்கவும், அவற்றை இலகுவாகச் சொல்லிப் பாடவும் அவை துணை புரிகின்றன

'உயிர்காத்த ஓவியம்' 'கெட்டிக்காரன் என்றாலும்' என்னும் மேலும் இரு கதைப்பாடல்கள் இப்படைப்பிலே இடம் பெறுகின்றன. எல்லோருக்கும் தெரிந்த ஆமையும் முயலும் கதையே 'கெட்டிக்காரன் என்றாலும்...' என்னும் பாடலிலே கூறப்பட்டுள்ளது. ஆனால், பாப்புனையும் கலையிலே கைதேர்ந்த சத்தியசீலன் அதனைப் புதுமையும் அழகும் பொருந்தியதாகப் படைக்கிறார்.

'கெட்டிக் காரன் என்றாலும்
எட்டிப் பிடிக்க முடியாதே'

என்று தூங்கிய முயலின் முயற்சியினைக் கூறும் ஆசிரியர், அம்முயலின் வாயாலேயே,

''தூங்கு மூஞ்சி முயல் நானும்
தோற்றுப் போனேன் தம்பியரே!

வாங்கில் படுத்துத் தூங்காது
வடிவாய்ப் படிப்பீர் தம்பியரே!''


என்று சிறுவர்க்கு அறிவுரையையும் வழங்கி விடுகிறார்.

சிறுவருலகம் தனியானது. அவர்கள் உள்ளம், விருப்பம், அசைவு, பேச்சு என்பனவெல்லாம் தனித்துவமானவை. இவற்றை உணர்ந்து, சிறுவர்களாகவே பாவனை செய்து பாப்புனைபவனே சிறுவர்களுடைய உள்ளத்தைத் தொடக்கூடிய, சிறுவர்கள் விரும்பிப் பாடியாடக் கூடிய பாக்களைப் பாட முடியும். பாவலவன் சத்தியசீலன் அத்தகையதொரு கவிஞன் என்பதற்கு இப்படைப்பு மேலுமொரு சான்றாகின்றது.

பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
7-10-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த அதிசயமான பாத அணிகள்



தோலைச் சேர்த்து வெட்டி
நூலைக் கோத்துக் கட்டிப்
பாலைப் பழம் போலே
பாத அணி செய்வான்

முத்தன் என்ற செம்மான்.
மெத்த ஏழை அம்மான்.

கைத்திறன் அமைந்த
சித்திரச் சப்பாத்துத்
தைத்தவனும் விற்று
மெத்தக்காசு பெற்று
எத்தனை நாளாச்சு?
மறந்தெல்லோ போச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலைக் கூட வாங்க
நாலு செப்புக் காசு
கையில் இல்லை. என்ன
செய்வம்?' என்று சொல்லி
வருந்தி வருந்திக் கொண்டே
இருந்த தோலை வெட்டி
வைத்து விட்டு முத்தன்
நித்திரை செய்தானே.

காலை வந்து பார்த்தான்;
தோலைக் காணவில்லை!
பாலைப் பழம் போலே
பாத அணி இரண்டு!

'பளிச்சுப் பளிச்சு' என்று
வழுக்கிச் சு,தாம் கையில்!
மூக்கில் விரல் வைத்தே
முத்தன் வியந்தானும்.

என்ன அழகு முத்தா!
எனக்கு விலைக்கு அதைத்தா.''
என்றோர் செல்வர் வந்தார்;
''நன்றாய் செய்தாய்'' என்றார்.

கையை விட்டார் பையில்;
காசை வைத்தார் கையில்.

முத்தன் எண்ணிப் பார்த்தான்;
பத்துச் செப்புக் காசு!

நன்றி என்று கூறிச்
சென்று தோலை வாங்கி
சித்திரமாய் வெட்டி
வைத்து விட்டு முத்தன்
சத்தியமாய் அன்றும்
நித்திரை செய் தானும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலே வந்து பார்த்தான்;
தோலேக் காண வில்லே.
பாலேப் பழம் போலே
பாத அணி நான்கு!

மூக்கில் விரல் வைத்து
முத்தன் வியந் தானும்!

''என்ன அழகு முத்தா!
எனக்கு விலேக்கு அதைத்தா''
என்ருர் சீமான் வந்தார்,;
''நன்ருய்ச் செய்தாய்'' என்ருர்.

கையை வைத்தார் பையில்;
காசை வைத்தார் கையில்.

முத்தன் எண்ணிப் பார்த்தான்;
பத்து வெள்ளிக் காசு!

''நன்றி'' என்று கூறிச்
சென்று தோலே வாங்கிச்
சித்திரமாய் வெட்டி
வைத்து விட்டு முத்தன்
சத்தியமாய் அன்றும்
நித்திரை செய் தானும்!

காலே வந்து பார்த்தான்;
தோலேக் காணவில்லே.
பாலேப் பழம் போலே
பாத அணி ஆறு!

மூக்கில் விரல் வைத்தே
முத்தன் வியந்தானும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன அழகு முத்தா
எனக்கு விலேக்கு அதைத்தா''
என்றுள் ஓர் சீமாட்டி;
எடுத்துக் காலில் மாட்டி.

''நன்ருய் இருக்குது எனக்கு;
நல்ல காசாம் உனக்கும்''
என்ருளே சீமாட்டி;
எடுத்துக் காசை நீட்டி.

முத்தன் எண்ணிப் பார்த்தான்;
பத்துத் தங்கக் காசு!

நன்றி கூறி வாங்கிச்
சென்று தோலே வாங்கி
அன்று போல முத்தன்
நன்ருய் உழைத்தானே.

மெத்தக் காசு சேர
முத்தன் யோசித்தாணும்.

'நித்திரை நான் செய்யும்
அத்தருணம் பார்த்துச்
சித்திரச் சப்பாத்துச்
செய்ப வரைப் பார்த்து
நன்றி சொல்ல வேண்டும்'
என்று சொன்ன முத்தன்
'இன்றே சொல்ல வேண்டும்'
என்றே விழித் திருந்தான்.

'நத்தார் இரவு' அன்று
பத்தி னியா ளோடு
தொங்கும் திரைச் சீலே
அங்கு மறைந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணி அடிக்கும்
சத்த மில்லை அங்கே.
பத்து டனே ஒன்று
சத்தமில்லை இன்னும்.

பன்னிரண்டை அடித்துச்
சின்ன மணி முடிக்க
யன்ன லாலே இரண்டு
சின்னவர்கள் பாய்ந்தார்!

நள்ளிரவு நேரம்
கள்ளரைப்போல் வந்த
குள்ளர் அடிக்கின்றார்,
குட்டிக் கரணந்தான்.

பாடுகிறார் பாட்டு!
ஆடுகிறார் ஆட்டம்!
பாடி ஆடிவிட்டே
ஓடுகிறார் உள்ளே.

வெட்டித் தோலை வைத்த
கட்டை மேசை மீது
உன்னி ஏறிக்கொண்ட
சின்னவர்கள் கையில்
தோலை எடுக்கின்றார்;
நூலை எடுக்கின்றார்.

"வேலை என்றால் என்ன
வேலை" என்றான் முத்தன்.

சின்ன விரலாலே
என்னென்னமாய்த் தைத்தார்!
சித்திரச் சப்பாத்தைச்
செய்து செய்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலும் முடிகிறதே,!
நூலும் முடிகிறதே.
பாலைப்பழம் போலே
பாதஅணி பத்து!
வேலை முடிந்திடவே
வெளியில் ஓடி வந்தார்.

பின்னும் பாட்டும் பாடி
இன்னும் ஆட்டம் ஆடி
யன்னலாலே பாய்ந்தச்
சின்னவர்கள் போனார்.

பத்தி னியா ளோடு
பார்த்து நின்ற முத்தன்
''அத்தனையும் கனவே''
என்பது போல் நின்றான்.

''இத்த னைசெல் வத்தை
எம்மனையிற் சேர்த்த
சித்தி ரக்குள் ளர்கள்
எத்தனை ஏழைகள்!

ஆடை யின்றி அன்றோ
வாடு கின்றார் குளிரில்!
தாடி யாலே தானே
மூடியுள்ளார் மேலே!

சட்டை இல்லை மேலில்.
கட்டையரின் காலில்
பாத அணி என்றே
ஏதுமில்லை மாதே''

முத்தன் இது சொல்லப்
பத்தினியாள் பொன்னி
''மெத்த நல்ல பட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்திடுவேன் சட்டை.
வைத்தி டுவோம் நன்றே
போடுவார்கள் இன்றே.

சின்னவர்கள் போட
வன்னப் பாத அணிகள்
தைத்திடுங்கள்; இன்றே
வைத்திடுவோம்'' என்றாள்.

வெட்டித் தோலை வைக்கும்
கட்டை மேசை மீது
சட்டை யோடு குட்டிச்
சப்பாத்தையும் வைத்து
முத்தனுடன் பொன்னி
நித்திரை செய்யாது
தொங்கும் திரைச்சீலை
அங்கு மறைந்திருந்தார்.

பத்துமணி அடிக்கும்
சத்தமில்லை அங்கே.
பத்துடனே ஒன்று
சத்தம் இல்லை இன்னும்.

பன்னிரண்டை அடித்துச்
சின்னமணி முடிக்க
யன்னலாலே பாய்ந்தச்
சின்னவர்கள் வந்தார்!

நள்ளிரவு நேரம்
கள்ளரைப் போல் வந்த
குள்ளர் அடிக் கின்றார்
குட்டிக் கரணந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு கின்ருர் பாட்டு!
ஆடுகின்ருர் ஆட்டம்!
பாடி ஆடி விட்டே
ஓடு கின்ருர் உள்ளே.

தோலும் இல்லை அங்கே!
நூலும் இல்லை அங்கே!

வெட்டித் தோலை வைக்கும்
கட்டை மேசை மீது
பட்டுச் சட்டையோடு
பாத அணி கண்டு

வெட்டி வெட்டி முளித்தார்!
தொட்டுத் தொட்டுப் பார்த்தார்.
குட்டிக் கரணந் தான்
கொஞ்ச நேரம் போட்டார்.

துள்ளிக் கொண்டு நின்ற
குள்ளர் ஆசையோடு
சட்டையையும் போட்டார்!
சப்பாத்தையும் போட்டார்.

பின்னும் பின்னும் பாடி
இன்னும் ஆட்டம் ஆடி
யன்ன லாலே பாய்ந்தச்
சின்னவர்கள் போனுர்.

பின் அவர்கள் என்றும்
அங்கு வரவில்லை.
பொன்னியுடன் முத்தன்
சேர்த்திட்டானே சொத்தை!

**என்று கதை முடித்தாள்**
**இங்கிலீசுப் பாட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா

முட்டி ஒன்றில் இட்ட காசைக்
கொட்டி எண்ணிப் பார்த்த பாட்டி
''தட்டை மூக்குப் பன்றி வாங்கலாம்''
என்றாளாம்.
''சந்தைக்கு ஓடிப் போக வேண்டும் நான்''
என்றாளாம்.

கூனலான முதுகுப் பாட்டி
கோபம் மிகவும் கொள்ளும் பாட்டி
தானனனைப் பாடிக்கொண்டு தான்
சென்றாளாம்.
தடியும் ஒன்றை எடுத்துக் கொண்டே ஏன்
சென்றாளாம்.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரான மூக்குப் பாட்டி
குடு குடு என்று நடக்கும் பாட்டி
பூராயத் தோடு சந்தை போய்ச் சேர்ந்தாளாம்.
'பொழுது சாயப் போகுது சாய்ச் சாய்' என்றாளாம்.

"குட்டிப் பன்றி இல்லை, அந்தக்
கொழுத்த பன்றி வேண்டும், இந்த
முட்டிக் காசை எண்ணிப் பார்க்கலாம்" என்றாளாம்.
மூக்கன் எண்ணிப் பார்த்து 'அவிழ்க்கலாம்' என்றானும்.

காசைக் கட்டும் கூனல் பாட்டி
கட்டி நின்ற பன்றி யாரை
ஆசைப்பட்டுத் தான் அவிழ்த்துப் போகின்றாளாப்.
ஏசிக் கொண்டு பின்னர் அங்கே ஏன் நின்றாளாம்?

நடந்து வந்த பன்றியாரும்
நடுவில் நின்ற கடைப்பினாலே
கடந்து வர மாட்டேன் 'ஓயிங்' 'ஓயிங்' என்றாராம்.
கல்லைப் போல இருந்து கொண்டே 'ஓயிங்' என்றாராம்.

'மாட்டன்' என்று சொல்லி விட்ட
மழுக்கன் என்ற பன்றியாரைப்
பாட்டியம்மா போட்டடித்துப் போம் என்றாளாம்.
பன்றியாரோ இருந்து கொண்டு 'ஊம்' என்றாராம்.

"போக்கிரியே உன்னை நானும்
தூக்கி விட ஏலுமாடா?
நாய் கடிக்கும் போது எழும்பிப் பாய் என்றாளாம்.
நாயைக்கூட்டிக் கொண்டுவாறன் போய் என்றாளாம்.

★

நாலு புறமும் பார்த்த போது
நல்ல தம்பி என்ற நாயார்
வாலை ஆட்டிக் கொண்டே அங்கு
வந்து சேர்ந்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நன்றி உள்ள நாயே வந்து
பன்றியாரைக் கடியும்'' என்று
நின்று பாட்டி கத்தினாளாம்!
நாயார் வரவில்லை!

''பன்றியாரைக் கடித்திடாது
நின்ற நாயை அடிக்க வாரும்
தடியாரே!''
என்றாள் பாட்டி.
தடியும் வரவில்லை.

''நாய்க்கு வந்தே அடித்திடாத
தடிக்கு நல்ல சூடு போடும்
நெருப்பாரே!''
என்றாள் பாட்டி.
நெருப்பும் வரவில்லை.

''நெட்டைத் தடியைச் சுட்டிடாத
நெருப்பை வந்தே அணைத்துப் போடும்
நீராரே!''
என்றாள் பாட்டி.
நீரும் வரவில்லை.

''நெருப்பை வந்தே அணைத்திடாத
நீரை வந்து குடித்துப் போடும்
எருதாரே!''
என்றாள் பாட்டி.
எருதும் வரவில்லை.

''நீரை வந்து குடித்திடாது
நின்ற மாட்டைக் கொன்று போடு
மாடுவெட்டி!''
என்றாள் பாட்டி.
அவனும் வரவில்லை.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாட்டை வெட்டிக் கொன்றிடாத
மழுவன் அவனைத் தூக்கில் போடும்
கயிறுரே!''
என்றுள் பாட்டி.
கயிறும் வரவில்லை.

''தூக்குத் தண்டனை கொடுத்திடாமல்
தொங்கும் கயிற்றை நறுக்கிப் போடும்
எலியாரே!''
என்றுள் பாட்டி
எலியும் வரவில்லை.

ஆன வரைக்கும் சொல்லிச் சொல்லி
அலுத்துப் போன கூனல் பாட்டி
பூனையாரைக்
கண்டபோது
புலம்பி அழுகிறுள்.

★

''பூனையரே! பூனையரே!
போய்ப் பிடிப்பீர் எலியாரை.

ஏனென்றுல் அந்த எலி
எமன் கயிற்றை நறுக்கவில்லை.

கயிறு என்றுல் மழுவனது
கழுத்தை வந்து நெரிக்கவில்லை.

மழுவன் என்றுல் அவனும் அந்த
மாட்டை வந்து வெட்டவில்லை.

மாடு என்றுல் அதுவும் அந்த
நீரை வந்து குடிக்கவில்லை.

நீர் என்றுல், அதுவும் அந்த
நெருப்பை வந்தே அணைக்கவில்லை.

நெருப்பு என்றுல்' அதுவும் அந்தத்
தடியை வந்தே எரிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடி என்றால், அதுவும் அந்த
நாய்க்கு வந்தே அடிக்கவில்லை.

நாய் என்றால், அதுவும் இந்தப்
பன்றியினைக் கடிக்குதில்லை.

பன்றி என்றால், இக்கடப்பால்
பாய்ந் தெல்லா போகுதில்லை.

பாயாத காரணத் தால்
படு கிழவி நான் எனது
வீடு செல்ல முடியவில்லை.
வீதியிலே தவிக்கிறன் பார்.''

என்றழுத பாட்டி அம்மா
''எலியாரை நீர் பிடித்தால்
நன்றி சொல்வேன் தங்களுக்கு
நாபியரே!'' என்றாளாம்.

கேட்டுக் கொண்டு நின்ற பூனை
கிழவி மேலே இரக்கங் கொண்டு
'பாட்டி கொஞ்சம் பால் தருவாய்
பால்' என்றதாம்.

வைக்கோல் போட்டுப் பசுவிடத்தில்
வாங்கி வந்த பாலைப் பாட்டி
பக்குவமாய்ப் பூனை யார்க்குப்
பருக்கி விட்டாளாம்.

பாலை இனிக்கக் குடித்த பூனை
''பாட்டி மறக்க மாட்டேன்'' என்று
வாலை முறுக்கிக் கொண்டு எலிமேல்
வந்து வீழ்ந்த தாம்!

பூனை எலியைப் பிடிக்கப் போக
எலியும் பயந்து கயிற்றில் பாய
கயிறும் மாடு வெட்டி கழுத்தைச்
சுற்றி வீழ்ந்ததாம்!

83493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுவெட்டி குழறிக் கொண்டு
மாட்டின் கழுத்தை வெட்டப் போக ...

மாடும் வெருண்டு 'நானும் தண்ணீர்
குடிப்பேன்' என்றே ஓடிப்போக ...

தண்ணீர் பயந்து குழறிக் கொண்டு
தானும் நெருப்பை அணைக்கப் பாய ...

நெருப்பும் அங்கு குழறிக் கொண்டு
நின்ற தடியை எரிக்கப் போக ...

தடியும் 'இந்தா பிடியும்' என்று
தானும் நாயை அடிக்கப் பாய ..

தடியைக் கண்டு பயந்த நாயும்
தானும் பன்றி மீது பாய ...

பன்றியாரும் குழறிக் கொண்டு
பாய்கின்றாரே கடப்பினாலே!

நன்றி என்று சொன்ன பாட்டி
நடக்கின்றாளே பன்றியோடு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காத்த ஓவியம்

— ஒரு பாட்டுக் கூத்து

KOHA JPL

உரை:

தூரிகையார் ஒரு புகழ் வாய்ந்த ஓவியர்.
அழகான படங்களைக் கீறுவதற்கென்று
பட்டுப்போன்ற மயிரை வளர்த்து வைத்தி
ருந்தார் ஓவியர் தூரிகை.

அந்த மயிரை நற நற என்று கொறிக்க வேண்
டும் — என்ற ஆசையிலே அலைந்தார்
எலி அண்ணர்!



இன்றுதான் தருணம் வாய்த்தது.
அழகான பல ஓவியங்களைத் தீட்டிய அயர்
வினாலே
தூரிகையார் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.
பதுங்கியிருந்த எலியார்,
பாய்ந்து வந்து பிடித்து விட்டார்
தூரிகையாரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரிகை. அய்யோ அய்யோ எலி! எலி!

எலி. அசடா! நான் ஒரு புலி! புலி!

தூரி. அய்யோ அம்மா எலி! எலி!

எலி. அசடா நான் ஒரு புலி புலி!
கையில் உள்ள நகத்தைப் பார்!
கத்தி போன்ற பல்லைப் பார்!
தும்பைப் போன்ற மீசையுடன்
தூரப் பாயும் புலி நானே!

தூரி. புலியாய் வந்த எலியாரே!
... ... ... ... ... ... ... ... ...
எலியாய் வந்த புலியாரே!
என்ன வேண்டும் சொல்லுங்கள்.

எலி. தலையைத் தாரும் தூரிகையே!

தூரி. தலையா? என்ன கேள்வி இது?

எலி. படங்கள் கீறும் தூரிகையே!
பட்டுப் போன்ற மயிர் மேலே
அடங்கா ஆசை கொண்டேனே!
அரித்துப் பார்க்க வந்தேனே!

தூரி. விடுங்கள் அய்யா எலியாரே!
விடுங்கள் அய்யா என் மயிரை.

எலி. கொடுங்கள் அய்யா தூரிகையே!
கொடுங்கள் அய்யா உம் தலையை

★

ஓடித்தான் பார்க்கின்றீர்!
உம்மைத் தான் தூரிகையே!
ஓடித்தான் பார்த்தாலும்
உம்மாலே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரி. ஓடத்தான் முடியாது.
ஒளித்துத்தான் பார்ப்போமே!

எலி. தேடித்தான் பிடிப்பேனே!
திருடன் நான் தூரிகையே!

சட்டியிலும் பெட்டியிலும்
சாடியிலும் மூடியிலும்
கொட்டி வைத்த பொருள் எல்லாம்
கொள்ளையடிக்,கும் கள்ளன்!

உம்மாலே முடியாதாம்,
ஓடாதீர் தூரிகையே.

தூரி. அம்மம்மா கொடுமை இது!
ஆர் சொல்லி வந்தீர்க்ள்?

எலி. ஆருமில்லை. உன் மயிரின்
அழகு சொல்லித் தான் வந்தேன்!


அம் மயிரை ஒருமுறை, நான்
அழகாக நறுக்கிவிடச்
சம்மதமா தூரிகையே!
சரி என்று சொல்லப்பா!

தூரி. ஏன் அய்யா இக் கொடுமை?
எலியான புலியாரே!
நான் இந்தத் தலைமயிரால்
நாலு பணம் உழைக்கிறவன்.

இந்த மயிர் இல்லாமல்
எப்படி நான் சீறுவது?
தந்தினத்தா பாடாது, என்
தலை மயிரை விடுமையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி. முடியாது. முடியாது.
தூரிகையே முடியாது.
வடிவான உன் மயிரை
வளர விட முடியாது.



தூரி. முடியாதா?

எலி. முடியாது.

தூரி. முடியாதா?

எலி. முடியாது.

தூரி. அட பாவி! அய்யையோ
ஆருமில்லையா உதவ?

எலி. பிடிவாதம் கூடாது
வடிவான தூரிகையே.

தூரி. அட பாவி! அய்யையோ!
ஆரிடம் நான் சொல்லி அழ?

எலி. ஆரடித்து நீர் அழுதீர்
அழகான தூரிகையே.
அடித்தாரைச் சொல்லி அழும்.
ஆக்கினைகள் செய்து வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி அடிச்சாளோ
படங் கீறும் கையாலே?
மாமன் அடிச்சானோ
மை பூசும் கையாலே?

தூரி. அட பாவி! விடு மயிரை!
அநியாயம் செய்யாதே.



எலி. கொடுகாணும் உன் மயிரைக்
கொய்து கொய்து நான் மகிழ.
கத்தியைப் போற் பல்லாலே
கற கறென்று நறுக்குகிறேன்.
சத்திய மாய்ச் சொல்லுகிறேன்,
நீர் சாக மாட்டீரே.

தத்திமிதா தாதிமிதா
தாதிமிதா தத்திமிதா.

தூரி. சங்கீதம் பாடி எனைச்
சதி செய்ய வந்தவரே!
இங்கிருந்து போய் விடுங்கள்.
என் மயிரை விட்டிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி. போவதற்கோ நான் வந்தேன்
புத்தி இல்லாத் தூரிகையே!
நோகாது நான் அரிப்பேன்.
முகம் மலர்ந்து பேசிடப்பா.

தூரி. என்னுடைய தலை மயிருக்கு
எமனாக வந்தவரே!
உம்முடைய பேச்சுக்குத்
தலையுமில்லை; வாலுமில்லை.
மொட்டையனாய்ப் போகின்றேன்
முகம் மலர்ந்து பேசிடவோ?
வெறும் கோலாய்ப் போகின்றேன்.
வியளங்கள் சொல்லிடவோ?

எலி. ஏசாதீர் தூரிகையே!
எனக்கந்தத் தலை மயிரில்
ஆசையப்பா! அதை நீயும்
அநியாயம் என்னாதீர்!
ஓடாதீர் தூரிகையே!
உம்மாலே முடியாது.
ஓடிப் போய் ஏனப்பா
வண்ணத்தைப் பூசுகிறீர்?

எலி. கறு கறுத்த மயிருக்கேன்
கரு வண்ணம் பூசுகிறீர்?
நறு நறென்று நான் கடிக்க
நாக்கில் அது பிடியாதோ?
வடிவான மயிருக்கேன்
வண்ணத்தைப் பூசுகிறீர்?
அட பாரேன்! தூரிகையார்
அழகாகச் சிரிக்கின்றார்.

★

தூரி. கன்னத்தில் கையை வையும்
கால் மேலே காலைப் போடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி. என்னத்துக் கப்பா?

தூரி. நானும்,

இறப்பதின் முன்னே, தங்கள்
அழகான படத்தைக் கீறும்
ஆசையைக் கொண்டேன் ஐயா!

எலி. என்னையா கீறப் போறீர்?
என்னையா கீறப் போறீர்?

தூரி. என்னையா கேள்வி? தங்கள்
எடுப்பான உருவத் தைத்தான்
கடைசியாய்க் கீறி விட்டுக்
கண்களை மூடப் போறன்.

எலி. கதிரையில் இருந்து கொண்டு
கண்களை இறுக்கி மூடும்
கைகளைக் கட்டிக் கொள்ளும்;
கால் மேலே காலைப் போடும்.

எலி. கதிரையில் இருக்கலாம்தான்
கண்ணை ஏன் மூட வேண்டும்?


தூரி. புதிர் ஒன்றும் இல்லைத் தங்கள்
பொல்லாத கள்ளக் கண்ணை
அதிலே நான் கீறி விட்டால்
அசல் எலிதானே நீங்கள்!

கண்களை மூடிக் கொண்டால்.
கட்டாயம் புலி தான் நீங்கள்

கண் மூடி விழிப்பதற்குள்
அண்ணையைக் கீறி வைப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி. அப்படியாடா தம்பி?
அசல்! ஆனல் கெதியாய்க் கீறு.



இப்படித்தானே .. ... ... ... ...?

தூரி. இன்னும்,
இறுக்கி மூடுங்கள் கண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலி. சரி தானு?

தூரி. ஆமாம்.

எலி. தம்பி!
கெதியாகக் கீறும். பாரும்,
அவசரப் பட்டால் எந்தன்
அழகெல்லாம் கெட்டுப் போகும்.

தூரி. கடைவாய்ப் பல் எங்கே அண்ணே?

எலி. கடவுளே! அதைக் கீருதே.
வடிவாக வாயை மூடி
வைக்கிறன்; சோக்காய்க் கீறும்.

ஒரு கதை; எனது வாலே
ஒல்லுப் பை தடிப்பாய்க் கீறும்.
பெரிசாக இருக்க வேணும்
மீசை; என் தும்பு மீசை.

ஆசையாய் இருக்கே தம்பி!
அரைக் கண்ணைத் திறந்தால் என்ன?

தூரி. பேசாமல் இருங்கள் அண்ணே!
பிறகு வாய் கோணும்!

எலி. வேண்டாம்!
நேராக நிமிர்த்திக் கீறு.
நேரமும் போகுதப்பா.
கூரான எனது பல்லும்
கொதிக்குது கொறிக்கச் சொல்லி.


கற கற – என்றரித்தால்
காதுக்கும் இனிய சத்தம்.
விறு விறென்று அரிப்பேன்; ஆனல்
நீ தப்பி விடுவாய் அப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிருக்கு மோசந்தான். உன்
உயிருக்கு மோசம் இல்லை.
உண்ணுணைத் தம்பி! உன்ரை
உயிருக்கு மோசம் இல்லை.

தூரி. உண்ணுணை அண்ணை, எந்தன்
உயிருக்கு மோசம் இல்லை.
கண்களைத் திறத்து பார்த்துக்
கவனமாய் ஓடிப் போங்கள்!

எலி. — கண்களைத் திறந்து பார்த்து —
கூர்ம் பல்லன்! கொழுத்த பூனை!
குரல்வளை போச்சு! தம்பி
தூரிகை ..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரி. அண்ணே ...!

எலி. நீதான்,
துணே ராசா கதவைச் சாத்து!
யன்னலால் பாய்ந்து போறேன்.
கும்பிட்டேன், கதவைச் சாத்து!

—தப்பினேன் பிழைத்தேன் என்று
யன்னலால் பாய்கிறது எலி.—

தூரி. அம்மாடி தப்பி விட்டேன்!
அதிசயந்தானே! பூனைப்

படத்தை நான் கீறிவைக்கப்
பறக்கிறுர் எலி அண்ணுச்சி!

வடிவான படத்தைக் கீறும்
வல்லமையாலே வென்றேன்!

தொடர்ந்தும் நான் படங்கள் கீறித்
தொழிலிலே தேர்ச்சி காண்பேன்.

உயிர் காத்த ஓவி யத்தை
ஓம்பி நான் வளர்க்கப் போறேன்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டிக்காரன் என்றாலும்...

ஓட்டப் போட்டி நடக்கிறது.
ஓடி வாரும் தோழர்களே!



ஆமை முயலுடன் பந்தயமாம்
ஆகா! ஓட்டப் பந்தயமாம்!

பறக்கின்றார் முயல் பறக்கின்றார்!
பாய்ந்து பாய்ந்தே ஓடுகிறார்.

பாவம் ஆமைத் தம்பியரோ
பஞ்சி இன்றி நடக்கின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து வந்த முயல் அண்ணர்
பாதி வழியில் ஏன் நின்ருர்?

பஞ்சி வந்து விட்டதடா!
கொஞ்ச நேரம் தூங்குகிருர்!

ஆனல் ஆமைத் தம்பியரோ
அரக்கிக் கொண்டே இருக்கின்ருர்.
அடிமேல் அடியை வைத்தாலும்
முயலைத் தாண்டி விட்டாரே!

வெற்றிக் கம்பம் தெரிகிறது.
விரைவாய் நகர்ந்து செல்லுகிருர்.

விழித்து விட்ட முயலாரும்
வேகமாய்த் தான் ஓடுகிருர்!



கெட்டிக் காரன் என்ருலும்
எட்டிப் பிடிக்க முடியாதே!
சுட்டித் தம்பி ஆமை அதோ
தொட்டு விட்டார் கம்பத்தை!

83493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை விட்ட முயலார் கூறுகிறார்:



தூங்கு மூஞ்சி முயல் நானும்
தோற்றுப் போனேன் தம்பியரே!

வாங்கில் படுத்துத் தூங்காது
வடிவாய்ப் படிப்பீர் நம்பியரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்படியும்!
# குழப்படியும்!




என் பெயர் தானே குழப்படி.
நீயும் நல்ல குழப்படி.

நான்
ஓங்கிய மரத்தில் தாவுவேன்.

நீ
வாங்கில் இருந்தே தாவுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை! ஊமை!



தம்பி! நான்தான் ஆமை.
தமிழ் பேசாத ஊமை.
முயல் அண்ணுவை எழுப்பு.
உனக்கும் வேண்டும் விழிப்பு.

★

வண்ணன் நல்ல குண்டு.
வாயில் அல்வாத் துண்டு.
கண்ணன் அவனைக் கண்டு,
கண்ணீர் விட்டான் மண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்! டாய்!



என் பெயர் தானே நாய்.
என்னைப் பெற்றவள் தாய்.
கள்ளனைக் கலைத்துப் போய்,
கழுத்தைப் பிடிப்பேன் 'டாய்'

★

நரியார் கட்டிய நடை.
காகத் துக்கு விடை.
வாயில் இருப்பது வடை.
சுவைத்திட என்ன தடை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பு! எழும்பு!

KOHA JPL

83493



நுளம்பார் போட்டார் ஊசி.
நுகுமான் அவரை ஏசி,
தடவிப் பார்த்தார் தலையை.
தலையில் மயிர் தான் இலையே!

★

நான்தான் தம்பி நுளம்பு.
நம்பி! உடனே எழும்பு.
போட்டேன் உனக்கோர் ஊசி!
புத்தகம் எடுத்து வாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PANRIYARAI VENRUVIDDA PADDY AMMA

CHILDRENS STORIES AND A PLAY
IN VERSE

by

Pavalavan, Pandit **P. SATHIASEELAN B. A. (Hons.)**



அந்த அதிசயமான பாத அணிகள்
பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா
உயிர்காத்த ஓவியம்
குழப்படியும் குழப்படியும்

இவை ஈழத்துச் சிறுவருக்கான
எமது தீபாவளிப் பரிசுகள்.

— திருமதி கலாதேவி சத்தியசீலன்
வெளியீட்டாளர்.

'கலைவண்ணம்''
ன்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (இலங்கை)
1-10-1989

PRICE: 15-00

சுவர்ண அச்சகம், K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org